# தொழுகையின் உயிரோட்டத்தைப் பா(தி)ழாக்கும் உடைகள்

அஷ்ஷைய்க் M.A. ஹபீழ் ஸலபி (M.A)

தற்போது கொவிட்-19 காரணமாக பல பள்ளிகள் தற்காலிகமாகப் பூட்டப்பட்டுள்ளன. எனினும், நமது சமூகத்தில் நான் அவதானித்த ஒரு முக்கிய விடயம் தொடர்பாகப் பேசலாம் என்று இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

தொழுகை என்பது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகவும் முஃமினின் வாழ்வில் அகீதாவிற்கு அடுத்ததாக அது முக்கியமான இடத்தை வகிக்கிறது. எனினும், ஐவேளைத் தொழுகைக்காக அல்லாஹ்வின் இல்லமான பள்ளிக்கு வரும் சிறுவர் முதல் முதியவர்கள் வரை பலர் தமது ஆடை விடயத்தில் அதிக கவனம் செலுத்துவதில்லை.

நாம் அல்லாஹ்விற்கு முன்னால் நின்று, அந்த அகில உலக ரப்புடன் உரையாட அவன் இல்லம் செல்கின்றோம் என்ற உணர்வுடன்தான் பள்ளியினுள் நுழைய வேண்டும்.

ஆனால், பலர் அந்த தூய உணர்வை சிதைக்கும் வகையில் தொழுகைக்கு வருகை தருகின்றனர் என்றே எண்ணத் தோன்றுகிறது அவர்களது புதுவகை Shirt, T-Shirt களை அவதானிக்கும் போது. இதை அறிந்து செய்கின்றார்களா? அல்லது அறியாமல் செய்கின்றார்களா? என்று சிலருடன் பேசிப் பாரத்த போது, இது பற்றி அவசியம் தெளிவுபடுத்த வேண்டும் என்ற நிலையை உணர்ந்து கொண்டேன்.

பல வண்ண வகை Shirt, T-Shirtகளை அணிந்துகொண்டு பட்டாளமாகப் பள்ளிக்கு வந்து, தொழுவது இப்போதெல்லாம் ஒருவித நோயாகிவிட்டது. இந்த நோயின் பாரதூரம் பற்றி எந்த நிருவாகமும் கவனிப்பதில்லை. எந்த நிருவாகியும் பெரிதுபடுத்துவதில்லை.

பள்ளிக்கு வருவோரில் சிலர் அணிந்து வரும் Shirt, Bottom,Jumper, T-Shirt போன்ற ஆடைகளின் பின் பக்கங்களை அவதானித்துப் பாருங்கள். சிறிய - பெரிய உருவப் படங்கள், கம்பெனிகளின் விளம்பரங்கள், பொருத்தமற்ற வசனங்கள், ஆங்கில எழுத்துக்கள், இலக்கங்கள் போன்றன ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இவ்வாறு, இஸ்லாத்திற்கு முரணான ஆடைகளை அணிந்து தொழுகைக்கு வருபவர்களைப் பார்த்து வெறுப்பை வெளிப்படுத்துபவர்களும் நம்மில் இருக்கவே செய்கின்றனர்.

கிரிகட், கால்பந்தாட்ட வீரர்களின் பெயர்கள் பதியப்பட்ட, இஸ்லாம் வெறுக்கும் உருவப்படங்களுடன் சில நிருவாகிகளும் ஆடை அணிந்து பள்ளிக்கு வருகின்றனர். உருவப்படங்களும் விளையாட்டு வீரர்களின் பெயர்களும் விளம்பரங்களும் நிறைந்துள்ள ஆடைகளை அணிந்து தொழுத தொழுகை அல்லாஹ்வின் அங்கீகாரத்தைப் பெறுமா? என்பது சந்தேகத்திற்குரியதாகும். இதனால் ஏற்படும் விளைவுகளை யாரும் கண்டுகொள்வதில்லை. நமக்கேன் வீண் வம்பு என்று ஒதுங்கிப் போகும் மவ்லவிகளும் நிருவாகிகளும் உள்ளனர்.

பள்ளிக்கு வருபவர்கள் அதற்குப் பொருத்தமற்ற ஆடைகளை அணிந்து வருகை தருவதைப் பார்த்து, இது பொருத்தமான ஆடையா? என்று கேட்டுவிடுவோமா என்று மனதுக்குள்ளே எண்ணிய சந்தர்ப்பங்களும் உண்டு. அவர்கள், தங்கள் அலுவலகங்களுக்குச் செல்லும் போது, ஆழகிய ஆடைகளை அணிந்து செல்கின்றனர். அரசியல் தலைவர்களைச் சந்திக்கும் போது,

வெள்ளை ஆடைகளை அணிந்து செல்கின்றனர். ஆனால், படைத்த அல்லாஹ்வுடன் உரையாட அவன் இல்லம் செல்லும் போது மட்டும் அவன் வெறுக்கும் ஆடைகளை அணிந்து செல்கின்றனர்.

சிலர் தமது பண பலத்தையும் பெருமையையும் செருக்கையும் தங்களது ஆடையில் காண்பிக்க முனைகின்றனர்.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ مَسْعُودٍ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَا يَدْخُلُ الْجَنَّةَ مَنْ كَانَ فِي قَلْبِهِ مِثْقَالُ ذَرَّةٍ مِنْ كِبْرٍ قَالَ رَجُلٌ إِنَّ الرَّجُلَ يُحِبُّ أَنْ يَكُونَ ثَوْبُهُ حَسَنًا وَنَعْلُهُ حَسَنَةً قَالَ إِنَّ اللَّهَ جَمِيلٌ يُحِبُّ الْجَمَالَ الْكِبْرُ بَطَرُ الْحَقِّ وَغَمْطُ النَّاسِ رواه مسلم

நபி (ஸல்) அவர்கள் "யாருடைய உள்ளத்தில் அணுவளவு தற்பெருமை இருக்கிறதோ அவர் சொர்க்கத்தில் நுழையமாட்டார்" என்று கூறினார்கள். அப்போது ஒரு மனிதர், "தமது ஆடை அழகாக இருக்க வேண்டும்; தமது காலணி அழகாக இருக்க வேண்டும் என ஒருவர் விரும்புகிறார். (இதுவும் தற்பெருமையில் சேருமா?)" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ் அழகானவன்; அழகையே அவன் விரும்புகின்றான். தற்பெருமை என்பது (ஆணவத்தோடு) உண்மையை மறுப்பதும், மக்களைக் கேவலமாக மதிப்பதும்தான்" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி), நூல் : முஸ்லிம் (147)

இஸ்லாமிய அங்கீகாரமற்ற ஆடைகளை அணிந்து பள்ளிகளில் தொழுபவர்களால் எத்தகைய விபரீதங்கள் ஏற்படுகின்றன என்பதை நாம் சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால் எமது வாதத்தின் நியாயத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

பள்ளியில் நாம் ஸப் ஸப்பாக நிற்போம். அவ்வாறு நாம் முன்வரிசையில் நின்று, நாம் அணிந்துள்ள ஆடையின் பின்பக்கத்தில் உருவப்படமோ, கம்பெனிகளின் விளம்பரங்களோ, பொருத்தமற்ற வசனங்களோ எழுதப்பட்டிருந்தால், அதை நமக்குப் பின்வரிசையில் நின்று தொழுவோர் வாசிக்க நேரும். அதனால், அவர்களின் கவனம் சிதறிவிடும்.

தூய எண்ணத்துடன் அல்லாஹ்வை அவனது இல்லத்தில் நினைவு கூறும் வேளையில், முன்னால் தொழுபவரின் பின்பக்க Shirt, T-Shirt களில் உள்ள காட்சிகள் கண்ணில் பட்டால், அதிலுள்ள வாசகங்கள் வாசிக்கப்பட்டால், தொழுகை என்னவாகும்? தொழுகையில் நபியவர்கள் கற்றுத் தந்த வாசகங்கள் ஓதப்படுவதற்குப் பதிலாக கிரிகட் ஹீரோக்களின் பெயர்கள் உச்சரிக்கப்பட்டால், கம்பெனிகளின் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் வாசிக்கப்பட்டால் தொழுகையில் ஏற்படும் பிரதி பலன்கள் கிடைக்காமல் போகலாம் அல்லவா? மற்றவர்களின் தொழுகையின் உயிரோட்டத்தைப் பாழ்படுத்தியதால், அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்ப முடியுமா?

அல்லாஹ்தான் எமக்கு எமது வெட்கத் தலங்களை மறைக்கும் ஆடையை அளித்துள்ளான். அந்த ஆடையை அணியும் நாம் இறையச்சத்துடன் வாழ வேண்டாமா?.

يَابَنِي آدَمَ قَدْ أَنزَلْنَا عَلَيْكُمْ لِبَاسًا يُوَارِي سَوْآتِكُمْ وَرِيشًا وَلِبَاسُ التَّقْوَى ذَلِكَ خَيْرٌ ذَلِكَ مِنْ آيَاتِ اللَّهِ لَعَلَّهُمْ يَذَّكَّرُونَ (26) سورة الأعراف

ஆதமுடைய மக்களே! உங்கள் வெட்கத் தலங்களை மறைக்கும் ஆடையையும், அலங்காரத்தையும் உங்களுக்கு அருளியுள்ளோம். (இறை) அச்சம் எனும் ஆடையே சிறந்தது. அவர்கள் சிந்திப்பதற்காக இது அல்லாஹ்வின் சான்றுகளில் உள்ளது. (அல்குர்ஆன் 7: 26)

பின்பக்கம் விளம்பரம் நிறைந்த ஆடைகளை கூட்டமாக அணிந்து வந்து பள்ளியில் தொழுகையில் ஈடுபடுவது சில இளைஞர்களுக்கு பேஷனாகிவிட்டது. சிலர் அப்படியான ஆடைகளுடன் தொழுகையில் ஈடுபடுவதைப் பெருமையாகவும் நினைக்கின்றனர். இவர்களின் ஆடைகளின் பின்பக்கத்தை அவதானித்து ஆத்திரப்பட்ட ஒருவர் பின்வருமாறு பதிவிட்டிருந்தார்.

*"ஒருவர் அணிந்து வந்த T-Shirt பின்பக்கத்தை அவதானித்த போது, என் இரத்தமே கொதித்தது. அவ்வளவு பயங்கரமான, மார்க்க முரணான காட்சி அது. முதுகு முழுவதும் இயேசுநாதரின் விசாலமான படம். அவர் பெரியதொரு சிலுவை ஒன்றை ஏந்தியவாறு கோவிலை நோக்கி மலைமேல் ஏறிச் செல்கிறார். இந்தக் காட்சி அந்த நபரின் முதுகுப் பக்கம் முழுவதும் ஆக்கிரமித்து இருந்தது."*

ஒரு நாள் நான் வீட்டில் சுகயீனமான நிலையில் T-Shirt அணிந்திருந்தேன். என்னைப் பார்க்க வந்த ஒரு பள்ளியின் நருவாகி மவ்லவி T-Shirt அணியலமா? என்று கேட்டார். ஏதே மல்லவிமார்கள் என்றால் அவர்களுக்கு என்று தணி ஆடை, பந்தா இருக்க வேண்டும் என்று எண்ணுபவர் அவர். அப்படியா? மல்லவிமார்கள் T-Shirt போடக் கூடாதா? அப்படி ஏதாவது மார்க்கத்தில் தடை இருக்கிறதா? என்று கேட்டேன். இல்லை, Shirt நல்லதுதானே என்று அவரது விளக்கங்களை சொல்லிக்கோண்டே போனார்.

நாள் பள்ளிக்கு வரும் போது இதை அணியவில்லை. பயான் பண்ணும் போதும் அணியவில்லை. T-Shirt அணிந்து பயான் பண்ண முடியாது என்ற நிலைப்பாட்டிலும் நான் இல்லை. மார்க்கம் தடுத்தவைகள் உள்ள ஆடைகளை அணியக் கூடாது என்ற நிலையை உணர்த்தினேன். அவர் புரிய மறுத்தார். அவரது பாணியில் பதில் சொன்னால் புரியுதா என்று பார்ப்போம் என்று, 'நீங்கள் சொல்லும் Shirt வகையை நபியவர்கள் உருவாக்கி, இது சுன்னத்தான ஆடைதான் என்று அறிமுகப்படுத்திவிட்டா சென்றார்கள் என்று கேட்டேன். அது அவருக்கு ஆத்திரத்தையும் என் மீது கோபத்தையும் ஏற்படுத்தியது. மார்க்க அறிவோ, பொதுப் புத்தியோ இல்லாத ஒருவருக்கு எனது கேள்வியின் நியாயம் புரியவில்லை. எனது எதிர்க்கேள்வியை அவரால் ஜீரணிக்கவும் முடியவில்லை.

இன்று நாம் அணியும் Shirt நபியவர்கள் அறிமுகப்படுத்திய சுன்னத்தான அடை என்றும் T-Shirt ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் அறிமுகப்படுத்திய வழிமுறை என்றும் இவர் போன்ற பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களது நிலைப்பாட்டை மவ்லவிமார்களிடம் திணிக்கவும் முனைகின்றார்கள்.

T-Shirtகளை தொழுகையில் அணியக் கூடாது என்று நான் வாதாடவில்லை. T-Shirt, Shirt இவை இரண்டிலும் நாம் மேலே சுட்டிக்காட்டிய விடயங்கள் இருக்குமாயின் அதை அணிந்து தொழுவதால் நமது தொழுகையும் பாழாகி, மற்றவர்களின் தொழுகையும் பாழ்படுத்தப்பட்டுவிடும் என்ற அச்சமே நமக்குள்ளது.

இஸ்லாம் காவி ஆடைகளைத் தடை செய்துள்ளது. நம்மில் அதிகமானவர்கள் ஆடைகளின் நிறத்தில் கவனம் செலுத்துவதுமில்லை.

أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عَمْرِو بْنِ الْعَاصِ أَخْبَرَهُ قَالَ رَأَى رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَيَّ ثَوْبَيْنِ مُعَصْفَرَيْنِ فَقَالَ إِنَّ هَذِهِ مِنْ ثِيَابِ الْكُفَّارِ فَلَا تَلْبَسْهَا رواه مسلم

*நபி (ஸல்) அவர்கள் என்மீது இரண்டு காவி ஆடைகளைக் கண்டார்கள். அப்போது " இது இறைமறுப்பாளர்களின் ஆடையாகும். இதை அணியாதே என்று கூறினார்கள்."*
*அறிவிப்பாளர் : அம்ர் பின் ஆஸ் (ரலி), நூல் : முஸ்லிம் (4218)*

பொதுவாக நாம் மார்க்கத்திற்கு முரணான வகையில் உள்ள ஆடைகளை அணிவதைத் தவிர்க்க வேண்டும்.. மார்க்கத்திற்கு முரணற்ற, நல்ல வகை *T-Shirt* களைக் கூட நான் ஜமாஅத் தொழுகைக்கு அணிவதைத் தவிர்த்தே வருகின்றேன்.

நான் மாணவனாகக் கற்றுக் கொண்டிருந்த போது, ஒரு தடவை பறகஹதெனியவில் பள்ளவாசலின் மேல்மாடியில் Bannar Art பண்ணிக் கொண்டிருந்தேன். லுஹர் தொழுகைக்கான அதான் ஒலித்தவுடன், பள்ளிக்குச் சென்று தொழுதேன். எனது *T-Shirt*ல், எங்கோ ஒரு மூலையில் Paint பட்டிருந்திருக்கிறது. அதை நான் காணவில்லை. நான் தொழுவிட்டு, மீண்டும் வந்து Art பண்ணிவிட்டு, வீட்டுக்குச் சென்றேன். எனது தந்தையிடம் யாரோ நான் அழுக்கான *T-Shirt* வுடன் பள்ளயில் வந்து தொழுததாக முறையிட்டிருந்தனர் என்பதை அறிந்து கொண்டேன். அன்று தொடக்கம் இன்று வரை நான் பள்ளிக்கு *T-Shirt* அணிந்து செல்வதில்லை.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் சில மன நோயாளிகள் இவ்வாறான வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தனர். நான் எனது வேலையை நிறுத்திவிட்டு, உரிய நேரத்தில் தொழ வந்தேன் என்பதை அந்த மனிதர் பார்க்க வில்லை. எனது *T-Shirt*ல் பட்டிருந்திரு Paint தான் அவருக்குகத் தெரிந்துள்ளது. அன்று நான் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதைத் தவறாகவே சித்திரித்துத் திரிந்தனர் சிலர். அன்றிருந்த சில மன நோயாளிகள் போன்று இன்றும் சில மன நோய் முற்றியவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

‘படைப்பாளனுடன் தொடர்பு கொள்ளும் போது, படைப்புகளுடன் தொடர்பு வேண்டாம்‘ என்று கைத்தொலைபேசியைப் பயன்படுத்த வேண்டாம் என்று பள்ளி முழுதும் விளம்பரம் ஒட்டி வைத்திருக்கின்றார்கள். ஆனால், தொழுகையை பா(தி)ழாக்கும் ஆடைகளுக்கும் இஸ்லாம் தடுத்த உடைகளுக்கும் தடைவிதித்து எந்த விளம்பரமும் வைப்பதில்லை.

உருவப்படங்கள், தவறான காட்சிகள், கம்பெனி விளம்பரங்கள், இலக்கங்கள், கால்பந்தாட்ட, கிரிகட் ஹீரோக்களின் படத்துடனான பெயர்கள், வசனங்கள் பொதிந்த ஆடைகள் அணிந்து பள்ளியில் நுழையாதீர்கள் என்று விளம்பரம் ஏதும் செய்வதில்லை. பள்ளி நிர்வாகிகள் அனைவரின் தொழுகைகைளையும் உயிரோட்டத்துடன் அமைய வழிசெய்வார்களா?

இஸ்லாமிய மார்க்கம் மனித குலத்திற்கு எல்லா வகையிலும் வழிகாட்டுகிறது.இந்த வழிகாட்டல்களைப் பேணி நடப்பவன் வெற்றி பெறுவான். அதைப் புறக்கணிப்பவன் தோல்வியடைவான்.